1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழகத்தில் மரவள்ளிக்கிழங்கு சேலம், தென்னாற்காடு, கன்னியாகுமரி, மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மிக அதிகமான பரப்பளவிலும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்,செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பரவலாகவும் பயிரிடப்பட்டு வருகிறது.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் முள்ளுவாடி கிராமத்தில் ஒரு மரவள்ளிக்கிழங்கு பரிசோதனை நிலையம் இயங்கிவருகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மரவள்ளிக் கிழங்கினுடைய புதிய ரகம் ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எம்.வி.டி. முள்ளுவாடி என்கிற புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண்மை மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

வைகை நதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண் 9—திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் 1981-82ல் எத்தனை பேருக்கு வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எந்த நபருக்கும் கடன் வழங்கப்படுவதில்லை. மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்து முடிப்பதற்காகும் செலவு கடனாகக் கருதப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் செய்து முடிப்பதற்காகிய செலவு ரூ. 5.47 இலட்சம் ஆகும்.

(ஆ) எந்த நபருக்கும் ரொக்கக் கடன் வழங்கப்படுவதில்லை. மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 762.

திரு. மெ. ஆண்டிஅம்பலம் : தலைவரவர்களே, வைகைநதி நீர்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு, நீர்பிடிப்பு ஆகியவைகளினால் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, சாயில் எரோஷனைத் தடுப்பதற்காகக் கடன் வழங்கும் நேரத்தில் ஒரு நபருக்கு 5,000 ரூபாய் என்ற முறையில் வழங்குவதாகவும், அதனால் பல ஏக்கரா நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே ஒரு நபருக்கு இவ்வளவு ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக ஏக்கராக்களின் அடிப்படையில் அந்தக் கடனைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கடன் ரொக்கமாக வழங்கப்படுவதில்லை என்பதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆகின்ற செலவினைத்தான் கடனாகக் கருதி பத்தாண்டு தவணைகளிலே வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

சென்னையில் போடப்பட்டுள்ள சோடியம் ஆவி விளக்குகள்

*வினா எண் 10—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் சோடியம் ஆவி விளக்குகள் பலவற்றில் நிறைந்த ஒளியில்லாதிருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சோடியம் ஆவி விளக்குகளில் ஒளித்திறன் மின் அழுத்த வேறுபாடுகளினால் மிகையாகவே பாதிக்கப்படுகின்றது. காலப்போக்கினாலும் ஒளித்திறன் குறைகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பலயிடங்களிலே இந்த சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த விளக்குகள் பொருத்துவதற்கு ஒரு விளக்குக்கு – அந்த பல்புக்கு ஆகும் செலவு எவ்வளவு? அது கெட்டுவிட்டால் அந்த நகராட்சிகளோ அல்லது நகரப் பஞ்சாயத்துக்களோ திரும்ப வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்களே, ஆகவே, அதற்குப் பதிலாக வேறு விளக்குகளை – கொஞ்சம மலிவான விலை உள்ள விளக்குகளைப் போட்டுக் கொள்வதற்கு அரசு அந்த நகராட்சிகளுக்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.